Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 263

செவ்வாய்க்கிழமை
16 ஒகஸ்ட் 2022

ஆடி 31 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 12
விலை : ரூ. 50

**முச்சந்தி முரளி**



"ஐஸ் வைத்து வாழ்வாரே வாழ்வார், மற்றல்லார் நைஸாக தாய்லாந்து பறப்பர்"

## வருகிறது யூரியா

கொழும்பு, ஒக. 16
இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் மேலும் 21 ஆயிரம் மெற்றிக் தொன் யூரியா இந்த வாரம் இலங்கைக்குக் கிடைக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு பகுதி சோளப் பயிர்ச்செய்கைக்காக வழங்கப்படவுள்ளது.
(அ-ஒ-இ)

## பல்கலை மாணவிகளுடன் ஆபாசமாக உரையாடல்

### கோப்பாய் பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், ஒக. 16
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீடத்தில் இரண்டாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவிகளுக்குத் தொலைபேசியில் அழைப்பெடுத்து ஆபாசமாக உரையாடும் இனந்தெரியாத நபர் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு 10 ➤

## மடு அன்னையின் பெருவிழா: இலட்சம் பக்தர்கள் பங்கேற்பு

மன்னார், ஒக. 16
மன்னார், மருதமடு அன்னையின் ஆவணி மாத பெருவிழா நேற்று திங்கட்கிழமை காலை சிறப்பாக இடம்பெற்றது. காலை 6.15 மணியளவில் மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில், அநுராதபுரம் மறைமாவட்ட ஆயர் நோபேட் அன்ராடி 10 ➤

# இந்தியாவும் இலங்கையும் எப்போதும் ஒரேபாதையில்!

## 'ஐஸ்' வைக்கிறார் ரணில்



**கொழும்பு, ஒகஸ்ட் 16**

**இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இருப்பது பொதுவான குணாம்சங்கள். இரு தரப்பும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள். எனவே இரு நாடுகளும் எப்போதும் ஒரே பாதையில் பயணிக்கின்றன - என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.** 11 ➤

## முதியவர் சடலமாக மீட்பு

கிளிநொச்சி, ஒக. 16
பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இத்தாவில் பகுதியில் முதியவர் ஒருவர் வீட்டின் பின் பக்கம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
தம்பையா கந்தசாமி (வயது - 65) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக நேற்றுக் கண்டெடுக்கப்பட்டுள்ளார்.
உயிரிழந்தவர் தனது மகளுடன் வசித்து வருகின்றார். மகள், கடந்த வெள்ளிக்கிழமை வவுனியாவுக்கு உறவினர் வீட்டுக்குச் சென்றுள்ளார். தந்தை தனித்து இருந்துள்ளார். வீடுதிரும்பிய மகள், தந்தையை தேடிய போது 12 ➤



## இந்தியாவுக்கு இராமனே மாவீரன் இலங்கைக்கு இராவணனும் மாவீரன்

### இந்தியத் தூதுவர் முன்பாக ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக. 16
இராமாயணத்தைப் பொறுத்தவரை, அது இரு நாடுகளுக்கும் பொதுவான இலக்கிய முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாக இருப்பதோடு ஒரு சில சிறிய வேறுபாடுகள் மாத்திரமே 10 ➤

சிங்கப்பூரில்

## 28 நாள்களில் ரூ.670 இலட்சம் ஏப்பம்விட்ட கோத்தாபய

கொழும்பு, ஒக. 16
முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சிங்கப்பூரில் தங்கியிருந்த காலப்பகுதியில் 67 மில்லியன் ரூபாவை விடுதிக் கான கட்டணமாக செலுத்தினார் எனத் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. 10 ➤

## புலம்பெயரிகளுக்குத் தடை நீக்கம் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

### பதறுகிறார் பொன்சேகா

கொழும்பு, ஒக. 16
தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருந்தமையால்தான் தடைப்பட்டியலில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும், அடையாளம் காணப்பட்ட தனி நபர்களும் சேர்க்கப்பட்டனர். தேசியப் பாதுகாப்புத் தொடர்பில் கவனம் செலுத்தாமல், 12 ➤

## இலங்கைக் கடற்பரப்புக்குள் நுழைந்தது சீனக் கப்பல்

கொழும்பு, ஒக. 16
சர்ச்சைக்குரிய யுவான் வாங் - 5 என்ற சீன அதி தொழில்நுட்பக் கப்பல், இலங்கைக் கடற் 10 ➤

## கைவிட்டது நுரைச்சோலை: மீள 3 மணிநேர மின்வெட்டு

விரிவு பக். 02

புறக்கோட்டையில்

## அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் தொடர்ந்தும் சரிவு

கொழும்பு, ஒக. 16
அரிசி, பருப்பு உள்ளிட்ட இறக்குமதி செய்யப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களின் மொத்த விலைகள் குறைந்துள்ளதாக புறக்கோட்டை மொத்த வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.
உருளைக்கிழங்கு, பருப்பு சீனி, செத்தல்மிளகாய், வெங்காயம் 10 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைநீக்கும் அறிவித்தல் சிறிலங்காவின் தந்திரம்!

## நாடு கடந்த அரசாங்கம் சுட்டிக்காட்டு

**கொழும்பு, ஓக.16**

**புலம்பெயர் அமைப்புக்களைத் தடை செய்வதும், நீக்குவதும் சர்வதேசத்தை ஏமாற்றும் சிறிலங்காவின் தந்திர விளையாட்டையே வெளிப்படுத்துகின்றது என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தெரிவித்துள்ளது.**

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் 6 புலம்பெயர் அமைப்புக்கள் மீதும், 316 தனிநபர்கள் மீதும் விதிக்கப்பட்டிருந்த தடையைச் சில தினங்களுக்கு முன்னர் நீக்கியது. இது தொடர்பில் விடுத்துள்ள அறிக்கையிலேயே நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் நிபந்தனைகளின் 1,373 இன் கீழ் இலங்கைக்குள் 577 நபர்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன், 18 அமைப்புக்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று சிறிலங்காவின் பாதுகாப்பு அமைச்சின் வர்த்தகமானி அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அடுத்த சில வாரங்களின் ஐ.நா மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்தத் தடை நீக்கப் பட்டியல் வெளியாகியுள்ளது. இது சர்வதேசத்தை ஏமாற்றும் இலங்கையின் வேடிக்கையான தந்திர விளையாட்டையே வெளிக்காட்டுகின்றது.

சிறிலங்காவின் இந்த நடத்தையானது 2012ஆம் ஆண்டு ஐ.நா. ஒழுங்குமுறை இலக்கம் ஒன்றை சிறிலங்கா துஷ்பிரயோகம் செய்வதை நிரூபிக்கின்றது.

ஐ.நா.வின் நம்பகத்தன்மையையும் குறைமதிப்புக்கு உட்படுத்துகிறது என்று நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# தானிஷ் அலிக்கு பிணை அனுமதி

கொழும்பு, ஓக.16

கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த கோத்தா கோ கம போராட்டக்களச் செயற்பாட்டாளரான தானிஷ் அலிக்கு நீதிமன்று பிணை அனுமதி வழங்கியது.

கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் நேற்று தானிஷ் அலி தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதிமன்றம் பிணை அனுமதி வழங்கியது.

தானிஷ் அலி கடந்த ஜூலை மாதம் 13ஆம் திகதி இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்துக்குள் பலவந்தமாக நுழைந்து ஒளிபரப்புக்கு இடையூறு ஏற்படுத்திய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இவர் டுபாய் செல்வதற்காக சிறிலங்கா எயார் லைன்ஸ் விமானத்தில் அமர்ந்திருந்தபோது, குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அவரை பலப்பிரயோகம் செய்து கைதுசெய்திருந்தனர். இது தொடர்பான காணொலி சமூக வலைத்தளங்களில் வெளியாகி சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (எ-இ)




# டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 357

கொழும்பு, ஓக. 16

இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று வீதத்தின் அடிப்படையில், அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 357.29 ரூபாவாகக் காணப்பட்டது. அமெரிக்க டொலர் ஒன்றின் விற்பனை பெறுமதியானது 368.60 ரூபாவாகக் காணப்பட்டது.

ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதியானது 430.86 ரூபாவாகவும், விற்பனைப் பெறுமதி 448.28 ரூபாவாகவும் காணப்பட்டது.

குவைத் தினாரின் பெறுமதியானது ஆயிரத்து 177.51 ரூபாவாகவும், கட்டார் ரியால் ஒன்றின் பெறுமதி 98.17 ரூபாவாகவும் காணப்பட்டது. (எ)

# கச்சதீவை மீட்பதுதான் பா.ஜ.க.வின் இலட்சியம்!

## அண்ணாமலை திட்டவட்டம்

சென்னை, ஓக. 16

கச்சதீவை மீட்க பிரதமர் மோடியிடம் வலியுறுத்துவோம் என்றும் கச்சதீவை மீட்பதே தமிழக பாரதிய ஜனதாக் கட்சியின் இலட்சியம் என்றும் அந்தக் கட்சியின் மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

இராமேஸ்வரத்தில் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்கு அருகில் ராமேஸ்வரம் உள்ளதால் அந்த நாட்டு கடற்படையின் தாக்குதல், சிறைபிடிப்பு சம்பவங்களால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

2017 தொடக்கம் 2018ஆம் ஆண்டு வரை இலங்கை சிறையில் இருந்த மீனவர்கள், படகுகளை பிரதமர் மோடி மீட்டுள்ளார். தற்போது யாழ்ப்பாணத்தில் உள்ள 60 படகுகளை மீட்க பிரதமரிடம் வலியுறுத்துவோம். 1974 இல் பிரதமராக இருந்த இந்திரா காந்தி தமது தவறான அணுகுமுறையால் கச்சதீவை இலங்கைக்கு தாரைவார்த்துக் கொடுத்தார்.

தற்போது இலங்கைக்குப் பயன்படாத நிலையில் கச்சதீவு உள்ளது. எனவே, கச்சதீவை மீட்க பிரதமர் மோடியிடம் வலியுறுத்துவோம். அதை மீட்பதே தமிழக பா.ஜ.கவின் இலட்சியம் - என்றார். (ம-14,இ)

# கைவிட்டது நுரைச்சோலை: மீள 3 மணிநேர மின்வெட்டு

கொழும்பு, ஓக.16



நுரைச்சோலை அனல் மின் நிலையத்தில் பழுதடைந்துள்ள முதலாவது மின்பிறப்பாக்கியின் திருத்தப்பணிகள் நிறைவடைவதற்கு 14 முதல் 16 நாள்கள் தேவைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் முதலாவது மின்பிறப்பாக்கி நேற்றுக் காலை திடீரென பழுதடைந்ததை அடுத்து, அனல் மின் நிலையத்தில் இருந்து தேசிய மின் விநியோகத்துக்கு முழுமையான பங்களிப்பை வழங்க முடியாது போனது.

நேற்றும், இன்றும் ஒரு மணித்தியாலம் 20 நிமிடங்கள் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என்று முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், நுரைச்சோலையில் ஏற்பட்டுள்ள தொழில்நுட்பக் கோளாறால் மின்வெட்டு நேரம் அதிகரிக்கும் என்று தெரிய வருகின்றது. நுரைச்சோலை அனல் மின்நிலையம் வழமைக்குத் திரும்பும்வரையில் நாளாந்த மின்வெட்டை 3 மணித்தியாலங்களாக அதிகரிக்க வேண்டிய நிலைமை ஏற்படும் என்று மின்சார சபைத் தகவல்கள் தெரிவித்தன.

இது தொடர்பான அறிவித்தல் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஊடாக வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# காலாவதியாகவுள்ள அவசரகாலச் சட்டம்

எதிர்வரும் 27ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ள அவசரகாலச் சட்டம் தொடர்ந்து நீடிக்கப்பட முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

கடந்த மாதம் 27ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நிலையில், நாடாளுமன்றம் தற்போது எதிர்வரும் 29ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அவசரகாலச் சட்டத்தை நீடிக்க வேண்டுமாயின் எதிர்வரும் 27ஆம் திகதி நாடாளுமன்றத்தில் மீண்டும் ஒப்புதல் பெற வேண்டியுள்ள நிலையில், எதிர்வரும் 27ஆம் திகதி நாடாளுமன்றத்தைக் கூட்டுவதற்கான சந்தர்ப்பம் ஏற்படாது என்று அறியமுடிகின்றது.

எதிர்வரும் 27ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அனுமதி பெறாவிட்டால் தற்போது நடைமுறையில் உள்ள அவசரகாலச் சட்டம் தானாகவே செயலிழக்கும். அதனால் அவசரகாலச் சட்டத்தைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்துவதற்கான ஏதுநிலை காணப்படாது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# ஆளுநர்கள் நியமனத்தில் ரணில் நகர்வால் சர்ச்சை

கொழும்பு, ஓக. 16

மாகாணங்களின் ஆளுநர்களை நீக்கிப் புதிய ஆளுநர்களை நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்துள்ள தீர்மானம் அரசியல் களத்தில் சர்ச்சைகளை ஏற்படுத்தியுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்கால அரசியல் நலன் கருதி ஆளுநர் நியமனத்தில் நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றார் என்ற குற்றச்சாட்டுக்களும் எழுந்துள்ளன.

அரசியலில் ஈடுபடாத, மரியாதைக்குரிய நபர்களுக்கு ஆளுநர் பதவி வழங்கப்படுவது மரபாக இருக்கும் நிலையில், தீவிர அரசியலில் ஈடுபட்டுவரும் சிலரை ஆளுநர் பதவிகளில் நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளமையே இந்தச் சர்ச்சைகளுக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்கால அரசியல் மற்றும் கட்சி நலன்களை முன்னிறுத்தி இந்த நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார் என்றும், இதனால் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றும் பல தரப்பினரும் விமர்சனங்களை முன்வைப்பதால், ஆளுநர் நியமன விவகாரம் இழுபறியில் உள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்.பி.க்களை விலைக்கு வாங்கி நாட்டை நகர்த்த ரணில் முயற்சி

## விஜித ஹேரத் எம்.பி. குற்றச்சாட்டு



**கொழும்பு, ஓக. 16**
**வேறு கட்சிகளிலுள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி, நாட்டைக் கொண்டு செல்வதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நோக்கமாகும்- இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான விஜித ஹேரத் குற்றஞ்சாட்டியுள்ளார்.**

ஜனாதிபதியின் சர்வகட்சி அரசாங்கம் தொடர்பில் ஜே.வி.பி.யின் நிலைப்பாடு தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார பிரச்சினைக்குத் தீர்வு காண சர்வகட்சி அமைத்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதற்காக நாடாளுமன்றத்தில் இருக்கும் அனைவருக்கும் ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். அரசியல் கட்சிகளையும் அழைத்து இதுதொடர்பாக கலந்துரையாடியிருந்தார். ஆனால் சர்வ கட்சி அமைப்பது இவர்களின் நோக்கம் இல்லை. அவ்வாறு சர்வகட்சி அமைக்கும் நோக்கமிருந்தால் சர்வ கட்சிக்குத் தேவையான வேலைத்திட்டத்தை அமைத்திருப்பார்கள். அவ்வாறான எந்த வேலைத்திட்டமும் இதுவரையில் இவர்களிடம் இல்லை.

அதனால் சர்வகட்சி அமைப்பது சாத்தியமில்லை. அது வெறும் கண்துடைப்பு. அதற்கான கொள்கையும் ஜனாதிபதிக்கு இல்லை. மாறாக வேறுகட்சிகளில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கி, அவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்கி அரசாங்கத்தை பலப்படுத்துவதே இவர்களின் திட்டமாகும்.

அதன் பிரகாரமமே தற்போது அரசியலமைப்பின் 22ஆவது திருத்தம் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. அந்த திருத்தத்தில் தேசிய அரசாங்கம் அமைப்பதாக இருந்தால், அதன் அமைச்சரவையின் எண்ணிக்கையை அரசாங்கம் தீர்மானித்துக்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இதுதான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் நாட்டை நிர்வகிக்க மேற்கொள்ளும் திட்டமாகும். அவ்வாறு இல்லாமல் நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாணவோ மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவோ சர்வகட்சி அமைத்து நிர்வகிக்கும் கொள்கையும் இல்லை.

அதற்கான வேலைத்திட்டமும் ரணில் விக்ரமசிங்கவிடம் இல்லை. மாறாக தனக்கு உதவி செய்தவர்களைப் பாதுகாத்து. அவர்களுக்குத் தேவையான முறையில் நாட்டைக் கொண்டு செல்ல நடவடிக்கை எடுத்திருக்கின்றாரே தவிர மக்களின் பிரச்சினைக்கு ஒருபோதும் நிலையான தீர்வொன்றை கொண்டுவரப்போவதில்லை- என்றார். (ம-14.இ)

# தமிழர் மீதான தடை நீக்கம் நல்லெண்ண சமிக்ஞையாம்

## டக்ளஸ் கண்டுபிடிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 16
புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை நீக்கத்தை, நல்லெண்ணச் சமிக்ஞையாக புலம்பெயர் உறவுகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார் அமைச்சர் டக்ளஸ்.

புலம்பெயர் உறவுகள் இந்தத் தடைநீக்கத்தை சரியான சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி, நாட்டில் வாழ்ந்து வருகின்ற தங்களுடைய உறவுகளின் பொருளாதார பலத்தைக் கட்டியெழுப்புவதற்கு முன்வரவேண்டும் எனவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார். (ம-27)

# கோப், கோபா குழுக்களின் தலைவர் பதவி ஐ.ம.ச.க்கு

## சபாநாயகருக்கு பரிந்துரை

கொழும்பு, ஓக. 16
தற்போதைய நாடாளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடருக்கான கோப் குழு மற்றும் கோபா குழு ஆகியவற்றின் தலைவர் பதவிகள் ஐக்கிய மக்கள் சக்திக்கு வழங்கப்படவுள்ளன என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அதன்படி கோப் குழுவின் தலைவர் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினரான எரான் விக்ரமரட்ணவின் பெயரும், கோபா குழுவின் தலைவர் பதவிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிமின் பெயரும் பரிந்துரைக்கப்பட்டு சபாநாயகருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

நாடாளுமன்றின் இரண்டாவது கூட்டத்தொர் ஜனாதிபதியால் ஒத்திவைக்கப்பட்டதையடுத்து முன்னதாக இருந்த கோப் மற்றும் கோபா குழுக்கள் கலைந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# புலம்பெயர் தமிழ் அமைப்புகள் அனைத்துக்கும் தடை நீக்குக!

## ரெலோ கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 16
எமது தொடர்ச்சியான கோரிக்கைக்கு அமைய ஜனாதிபதி அண்மையில் சில புலம்பெயர் அமைப்புகளின் தடைகளை நீக்கி உள்ளதை வரவேற்கிறோம். அதேநேரம் இன்னும் பல அமைப்புகளும் தனிநபர்களின் பெயர்களும் தடைசெய்யப்பட்ட பட்டியலிலேயே காணப்படுகின்றன. அவர்கள் மீது உள்ள தடையை நீக்குமாறும் நாம் ஜனாதிபதியையும் அரசாங்கத்தையும் கோருகிறோம்- இவ்வாறு தெரிவித்துள்ளது ரெலோ.

ரெலோ அமைப்பினால் விடுக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

எமது கோரிக்கையின் பிரதான காரணம் நாடு எதிர்கொண்டிருக்கும் பொருளாதார சிக்கலில் இருந்து மீள்வதற்கு முதலீடு மிக அவசியமாகிறது. புலம்பெயர் உறவுகள் பலர் இங்கு முதலீடு செய்வதில் இருக்கக்கூடிய பிரதான சிக்கல் பாதுகாப்பின்மை ஆகும்.

தாங்கள் பெரும் முதலீடுகளை இங்கு ஏற்படுத்திய பின்னர் தடைசெய்யப்பட்ட அமைப்புகளுடன் தொடர்பு இருப்பதாக காரணம் காட்டி தங்கள் முதலீடுகளை முடக்கவும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யவும் முடியும் என்று அச்சம் கொள்கிறார்கள். எனவே முதலீடு செய்யத் தயாராக இருக்கும் புலம்பெயர் உறவுகள் அச்சமின்றி தங்கள் முதலீடுகளை செய்வதற்கு இந்தத் தடைகளை நீக்குவது அவசியம்.

ஆகவே இதைக்கருத்தில் கொண்டு ஏனைய புலம்பெயர் அமைப்புகளையும் தனிநபர்களின் பெயர்களையும் தடைப்பட்டியலில் இருந்து நீக்குமாறு கோருகிறோம்-என்றுள்ளது. (ம)

# தமிழக பால்மாபொதி காலாவதி; உரிய விசாரணை எடுக்கப்படும்!

## துறைசார் அதிகாரிகள் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 16
இலங்கைக்கு தமிழக அரசால் வழங்கப்பட்ட வாழ்வாதார உதவிப் பொருள்களில் காலாவதியான பால்மா பொதிகள் விநியோகிக்கப்பட்டன எனக் கூறப்படும் விடயம் தொடர்பில் ஆராயப்படும் என்று துறைசார் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பால்மா பொதிகள் 3 வயதுக்குட்பட்ட குழந்தைகள் உள்ள குடும்பங்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன.

பதுளை உள்ளிட்ட சில பகுதிகளில் விநியோகிக்கப்பட்டுள்ள பால்மா பொதிகளில் உற்பத்தித் திகதி மற்றும் காலாவதி திகதி என்பன அழிந்துள்ளன.

மேலும் சில பிரதேசங்களில் உற்பத்தி மற்றும் காலாவதியாகும் திகதி என்பன குறிக்கப்படும் இடத்தில் 'இந்தப் பொதி விற்பனைக்கு அல்ல' என்ற வாசகம் பொறிக்கப்பட்டுள்ளது என மக்களால் சுட்டிக்காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# மக்கள் ஒத்துழைத்தாலேயே நாடு மீண்டெழும்!

## ஐ.தே.க. தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவிப்பு

அனைத்துக் கட்சிகளையும் இணைத்துக்கொண்டு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொண்டு செல்லும் வேலைத்திட்டத்துக்கு மக்கள் ஒத்துழைப்பு வழங்கினால் மட்டுமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும்.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

நாடு எதிர்கொண்டுள்ள பிரச்சினைக்குத் தீர்வுகாண மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2020ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் நாட்டைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்பும் கொள்கைத் திட்டம் ஒன்றைத் தயாரித்துப் பகிர்ந்தளித்தோம். ஆனால் அந்தக் கொள்கைத் திட்டத்தை மக்கள் குப்பைத் தொட்டியில் போட்டார்கள். அதன் விளைவாக இன்று நாடு குப்பைத் தொட்டியில் விழுந்துள்ளது. அன்று நாங்கள் வழங்கிய கொள்கைப் பிரகடன வெளியீடை மக்கள் மீண்டும் வாசித்துப் பார்க்கவேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன்.

மக்கள் அன்று எமது கொள்கை வெளியீட்டை சுயபுத்தியுடன் வாசித்துப்பார்த்து தீர்மானித்திருந்தால், எமது நாடு இன்று ஆசியாவின் உயர்ந்த இடத்தில் இருந்திருக்கும். என்றாலும் பொய் வாக்குறுதிகள், போலிப் பரப்புரைகளால் மக்கள் ஏமாற்றப்பட்டார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நிகரான வேறு ஒரு தலைவர் உலகிலேயே இல்லை. அதனால் நாடு தற்போது எதிர்கொண்டுள்ள நெருக்கடி நிலையைக் கருத்திற்கொண்டு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து, ஜனாதிபதியின் வேலைத்திட்டத்துக்கு ஒத்துழைப்பு வழங்கினால் நிச்சயமாக நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் - என்றார். (ம-14.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடுத்திருப்பதியில் நேற்றுத் திருவிழா பக்திபூர்வம்!







இலங்கையின் புகழ்பூத்த கத்தோலிக்க ஆலயமான மடுத்திருப்பதியின் திருவிழா நேற்றையதினம் பல லட்சம் பக்தர்களின் பங்கேற்புடன் உணர்வுபூர்வமாகவும் பக்திபூர்வமாகவும் முன்னெடுக்கப்பட்டது. கொரோனாத் தொற்றுக் காரணமாக கடந்த இரு வருடங்களாக திருவிழா விமரிசையாக இடம்பெறாத நிலையில், இந்த வருடத் திருவிழாவுக்கு நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் பக்தர்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். (ம)

# யானைகள் அச்சுறுத்தல் துரிதகதியில் அறுவடை!

## விவசாயிகள் அந்தரிப்பு

**யாழ்ப்பாணம், ஓக. 16**

**யானைகள் எந்நேரமும் வயல்களுக்குள் இறங்கி, விளைச்சலை நாசம் செய்யலாம் என்ற அச்சத்தால் அறுவடைப் பணிகளைத் துரிதகதியிலும் அவசரஅவசரமாகவும் மேற்கொள்ள வேண்டியுள்ளது என்று கிளிநொச்சி - வன்னேரிக்குளம் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.**

வன்னேரிக்குளத்தின் கீழ் விவசாயிகள் சிறுபோக நெற்செய்கைகளை மேற்கொண்டிருந்த நிலையில், தற்போது அறுவடைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே விவசாயிகள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது: முல்லைத்தீவு மாவட்டத்தின் தென்னியங்குளம் போன்ற கிராமங்களில் யானை வேலிகள் அமைக்கப்பட்டுள்ளதன் காரணமாக வன்னேரிக் குளம் கிராமத்துக்குள் யானைகள் ஊடுருவுவது சாதாரணமான விடயமாக மாறிவிட்டது.

சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படாத சந்தர்ப்பத்திலேயே கிராமத்தின் நடுப்பகுதிவரை வருகை தரும் யானைகள் தென்னை, பலா, வாழை போன்ற பயன்தரு மரங்களை அழித்து வருகின்றன. கிராமத்தில் விவசாயக் கூட்டங்களை நடத்தவரும் அதிகாரிகளிடம் யானைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுங்கள் என வலியுறுத்துகின்ற போதிலும் எந்தப் பயனும் இல்லை - என்றனர். (ம-13)

*இவ்வாண்டின் முதல் 4 மாதங்களில்*

# யானைத் தாக்குதலில் 34 பேர் உயிரிழப்பு!



கொழும்பு, ஓக. 16

இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் மாத்திரம் யானைகளின் தாக்குதல்களுக்கு உள்ளாகி 34 பேர் உயிரிழந்துள்ளனர் என விவசாய, வனஜீவராசிகள் மற்றும் வனவள பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

யானைகளுக்கும் மனிதர்களுக்கும் இடையிலான 'வாழிட மோதலால்' இந்த இறப்புகள் சம்பவித்துள்ளன என்றும் வனவளப் பாதுகாப்பு அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. அதேவேளை, விபத்து, மின்வேலி, வேட்டை உள்ளிட்ட காரணங்களால் 47 யானைகள் கொல்லப்பட்டுள்ளன என்றும் வனவள பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. (ச-இ)

# இந்திய சுதந்திரதினம் யாழில் கடைப்பிடிப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 16

இந்தியாவின் 76ஆவது ஆண்டு சுதந்திர தினம் யாழ். இந்தியத் துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில், யாழ். இந்தியத் துணைத்தூதுவர் அலுவலகத்தில் நேற்றுக் கடைப்பிடிக்கப்பட்டது.

யாழ். இந்தியத் துணைத் தூதுவர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன. அத்துடன், இந்தியக் குடியரசு ஜனாதிபதி திரௌபதி முர்மு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியும் வாசிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சிறப்புரைகள் இடம்பெற்றன. நிகழ்வில் இந்திய தூதரகத்தின் உயர் அதிகாரிகள், அலுவலர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-14,27,20)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

நாளொரு நல்வார்த்தை

"உலகில் உள்ள அனைத்து எதிர் மறையான எண்ணங்களும் சிந்தனைகளும் 'பயம்' என்ற ஒன்றிலிருந்து மட்டுமே பிறக்கிறது"

- சுவாமி விவேகானந்தர்

## டொலரை ஈட்டுவது எப்போது?

அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியையும் இருப்பையும் உறுதிப்படுத்தும் வகையில் 2,500 பொருள்கள் மீதான இறக்குமதிகளுக்குக் கட்டுப்பாடுகளை விதிக்குமாறு நீதியமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது இலங்கை மத்திய வங்கி.


பொருள்களைக் கட்டற்ற வகையில் இறக்குமதி செய்தால்– இறக்குமதிகளில் தாராளம் காட்டினால் திறைசேரி டொலரின் இருப்பை இழக்கும். இதனால், அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியை மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும். ஆதலால்தான், டொலரின் தேவையற்ற வெளிச்செல்கையைத் தவிர்க்கும் வகையிலும் அத்தியாவசியப் பொருள்களின் இறக்குமதியையும் சுழற்சியையும் உறுதிப்படுத்தும் வகையிலும் இந்தப் பரிந்துரையை முன்வைத்துள்ளது மத்திய வங்கி.

டொலரின் இருப்பை உறுதிப்படுத்துவதற்கு மத்திய வங்கி இவ்வாறான வியூகத்தைக் கையிலெடுப்பது இதுவொன்றும் முதல்முறையல்ல. கோத்தாபய அரசாங்கத்தின் காலத்திலும் இதே வியூகம் நடைமுறைப்படுத்தப்பட்டது. 'ஏழு மூளை'களைக் கொண்டவர் என்று பெரமுனவினர் பிதற்றிய பஸில் இந்தத் திட்டத்தை முன்வைத்தார். ஆனால், இந்த வியூகம் ஒரு தற்காப்பு உத்தியே தவிர டொலரை ஈட்டுவதற்கோ அல்லது தக்கவைப்பதற்கோ சிறந்த பொறிமுறை அல்ல என்பதை வரலாறு அவருக்கும் நாட்டுக்கும் கற்பித்தது. இன்று பஸிலும் இல்லை, கோத்தாபயவும் இல்லை. தற்போது, அதே பாதையில் ரணிலின் அரசாங்கம் பயணப்படவும் டொலர் கையள்கையை மேற்கொள்ளவும் எத்தனிக்கின்றது என்பதை இறக்குமதிப் பொருள்களுக்கு விதிக்கப்படலாம் என்று கருதப்படும் இந்தத் தடைகள் கட்டியம் செய்கின்றன.

நாட்டில் தற்போது மிஞ்சியிருக்கும் சொற்ப டொலரும் கடன்களால் வாய்த்ததுதான். இலங்கை தன் உழைப்பால் ஈட்டிய டொலர் என்பது அதில் மிகச்சொற்மே. இப்படியிருக்கையில், இறக்குமதிகளுக்கு விதிக்கும் கட்டுப்பாடுகளால் இந்த நாடு எத்தனை நாள்களுக்குத் தாக்குப்பிடிக்கும்? எத்தனை நாள்களுக்கு இறவாதிருக்கும்? தற்போது நாட்டுக்குத் தேவை டொலரை ஈட்டுகின்ற வழிமுறைகளைப் பின்பற்றுவதும் பொறிமுறைகளை உருவாக்குவதுமே தவிர டொலரை அடைகாக்கும் வியூகங்கள் அல்ல.

ரணில், அரசாங்கத்தைப் பொறுப்பேற்று சுமார் ஒரு மாதம் நிறைவடையவுள்ளது. இந்த ஒரு மாதத்தில் டொலரை ஈட்டக்கூடிய எத்தனை துறைகளை அவராலும், அவரது அரசாங்கத்தாலும் உயிர்ப்பிக்க முடிந்தது? என்ற கேள்விக்கான பதிலை – தெளிவுபடுத்தலை அரசாங்கம் முன்வைக்க வேண்டும். டொலரை ஈட்டுவதில் முதன்மை இடத்திலிருப்பது சுற்றுலாத்துறை. இந்தத் துறை கோத்தாபயவின் ஆட்சியில் எங்கு வீசப்பட்டதோ இன்றும் அதே இடத்தில் வீழ்ந்து கிடக்கின்றது. தேயிலை ஏற்றுமதி, ஆடை ஏற்றுமதி என்பனவற்றிலும் சொல்லிக்கொள்ளும்படியான பின்னடைவே ஏற்பட்டிருக்கின்றது.

ஆக, பிராந்தியப் பதற்றம், ஐ.நா.வை ஏமாற்றும் சதுரங்க ஆட்டம், அரசாங்கத்துக்கு எதிரான போராட்டக்காரர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் வேட்டை இவைதான் ரணிலின் ஒரு மாத ஆட்சியின் சாட்சிகளாக உள்ளன. இத்தகைய குணாம்சங்கள் உள்ள ஆட்சியால் டொலரை ஈட்டுவதற்கு மட்டுமல்ல யாசகம் எடுப்பதற்குக்கூட முடியாது. இவ்வாறாக, டொலரை ஈட்டுவதற்கான கதவுகளை அடைத்துவிட்டு, இருளில் எதைத்தான் இந்த அரசாங்கம் தேடுகின்றது. இப்போது 'ஓர் அரசாங்கம்' செய்யவேண்டிய காலக்கடமை டொலரை ஈட்டுவதற்கான வழிகளை கண்டறிவதுடன் இருக்கும் வழிகளைப் பலப்படுத்த வேண்டியதுதான். மாறாக பொருள்களுக்குத் தடை, இறக்குமதிகளுக்குக் கட்டுப்பாடு விதித்தல், மட்டுப்படுத்தப்பட்ட விநியோகம் செய்தல் எல்லாம் பழைய பல்லவிகள் – காலாவதியாகிப்போன வியூகங்களே.



புலம்பெயர் தமிழர்களிடமிருந்து

# தேசிய இனப்பிரச்சினையை தீர்த்தால்தான் உதவிகிட்டும்

மாவை சேனாதிராசா கருத்து



**யாழ்ப்பாணம், ஓக. 16**

**தேசிய இனப்பிரச்சினையை தீர்த்தால்தான் புலம்பெயர் தமிழர்களின் உதவிகள் இலங்கைக்குக் கிட்டும் - இவ்வாறு தெரிவித்தார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா.**

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'புலம்பெயர் தமிழர்கள் மற்றும் சில அமைப்புகள் மீதான தடையை நீக்கியமை நல்ல செய்தி என்றுதான் நாங்கள் எண்ணுகின்றோம். பொருளாதார ரீதியாக உதவிகளைப் பெறலாம் என்ற நம்பிக்கையுடன் சில புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீதான தடையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீக்கியுள்ளார் என்று நாங்கள் எண்ணலாம்.

தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை ரணில் அரசாங்கம் வழங்கினால்தான் அவர்கள் எதிர்பார்க்கின்ற புலம்பெயர் தமிழர்களுடைய முதலீடுகளும், பொருளாதார நெருக்கடியை நிவர்த்தி செய்வதற்கான உதவிகளும் கிடைக்கும் என்று கருதவேண்டும்' - என்றார். (ம-22)

புலம்பெயர் தமிழர்களின்

# முதலீட்டை எதிர்பார்த்தே தடையை நீக்கியது அரசு!

சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 16

புலம்பெயர் தமிழர்களின் முதலீடுகளையும், அவர்களிடமுள்ள டொலரையும் எதிர்பார்த்தே தடைகளை ரணில் அரசாங்கம் நீக்கியுள்ளது என்று தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான புளொட்டின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் பலர் மீதான தடையை கடந்த மைத்திரி - ரணில் அரசாங்கம் நீக்கியிருந்தது. பின்னர் ஆட்சிக்கு வந்த கோத்தாபய அரசாங்கம், மீண்டும் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மற்றும் தனிநபர்கள் மீது தடையை விதித்திருந்தது. தற்போது ஆட்சிக்கு வந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தத் தடையை நீக்கியுள்ளார். புலம்பெயர் தமிழர்களுடைய முதலீடுகளும், உதவிகளும் இலங்கைக்கு வரவேண்டும் என்று ரணில் அரசாங்கம் எதிர்பார்க்கின்றது. ஆகவே, இந்தத் தடையை ரணில் அரசாங்கம் நீக்கியுள்ளது' - என்றார். (ம-22)

நாளை

17.09.2022
புதன்கிழமை
ஆவணி 01

சுபநேரம் : 04.35 - 06.05
ராகுகாலம்: 12.05 - 01.35

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் அழைப்பும்



பிறப்பு 23.06.1946 — இறப்பு 28.07.2021

கடந்த 28.07.2021 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்

## அமரர் தம்பிப்பிள்ளை சர்வானந்தம்

ஆண்டு ஒன்று வந்து விட்டதே, எங்கள் துயரம் நீங்கவில்லை எங்கள் அன்புத் தெய்வம் அண்ணையே! மைத்துனரே ஆசை மாமாவே அருமைத் தாத்தாவே! நீங்கள் உங்கள் அம்மாவுடனும் இரு தங்கைகள் மைத்துனருடனும் சேர்ந்து வாழ்கின்றீர்கள். நாம் இங்கு தனிமையில். நீங்களாவது எங்களுடன் இன்னும் கொஞ்சக் காலமாவது வாழ்ந்து எங்களுக்கு இனிய கதைகள் பேசி எங்களை மகிழ்விப்பீர்கள் என்றிருந்தோம் அதற்குள் பொல்லாதகாலனவன் கொரோனா வடிவில் வந்து ஆண்டவனிடம் அழைத்து விட்டார். நம்ப முடியவில்லையே என்ன செய்வது எல்லாம் விதியின் செயல் என்று இன்று நீங்கள் வணங்கிய குலதெய்வங்களை உங்கள் ஆத்மா சாந்திபெற கண்ணீர்ப் பூக்களால் காணிக்கை செலுத்து கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!!! ஓம் சாந்தி!!!**

அன்னாரின் முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை இன்று (16.08.2022) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் நினைவுப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்

சகோதரி - சந்திராதேவி, மைத்துனர் - சோதிலிங்கம்
மருமக்கள் : ஜெயந்தன் - சுகிர்தா, அகிலன் - துபீரா
திருமதி தீபா ஞானேஸ்வரன்
பேரப்பிள்ளைகள் : அபிசன், அக்ஷயா, கர்ஷவிகா, துஷகா, திஷகா, பதுமிலன், தஸ்வினி.
கற்பகப்பிள்ளையார் கோவில் வீதி,
உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.

# 31ஆம் நாள் (வீட்டுக்கிருத்திய) நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம் 12 — 10 — 1931



மறைவு 17 — 07 — 2022

திருமதி

## பூமணி வைத்தியலிங்கம்

அன்புடன் அரவணைத்து
ஆறுதல் தந்தாய் அம்மா
துன்பங்கள் களைந்தே என்றும்
தூய நல் வாழ்வு தந்தாய்
என் செய்வோம் ஏங்குகின்றோம்
ஏனம்மா எம்மை விட்டு
சென்றனை சிவனார் பாதம்
சேர்ந்து நீ பெறுக சாந்தி!

எமது குடும்பத் தலைவியின் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு நேரடியாகவும் தொலைபேசி மூலமும் தமது இரங்கலைத் தெரிவித்தவர்களுக்கும் அஞ்சலி உரை நிகழ்த்தியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

துரை வீதி,
இணுவில் தெற்கு, கோண்டாவில்.

குடும்பத்தினர்
077 768 2265

(CS 45983 ) (3/6)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 — 12 — 1949



மறைவு 16 — 08 — 2020

திருமதி

## அன்னலட்சுமி செல்வநாயகம்

ஆண்டுகள் கடந்து போகும்...
அரும்புகள் பூவாய்,
காயாய், கனியாய்...
பின்னர் விதையாய்..
விருட்சமாய் வளரும் வீழும்!
தினமும் மனதுக்கு
நின்மதி தந்து...
உங்கள் நினைவுகள்
என்றும் வாழும்!

இணுவில் தெற்கு,
இணுவில்.

உங்கள் பிரிவால் வாடும்
கணவன், பிள்ளைகள்

(CR 37011 ) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க செலவினங்களை கட்டுப்படுத்த அறிவுறுத்தல்

## அரச நிறுவனத் தலைவர்களுக்கு ஜனாதிபதி செயலாளர் கடிதம்

**கொழும்பு, ஓக. 16**

**அரசாங்க செலவினங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை ஒன்றை விடுத்துள்ளார் என்று ஜனாதிபதியின் செயலாளர் தெரிவித்துள்ளார்.**

அரச செலவினங்களைக் கட்டுப்படுத்தல் என்ற தலைப்பில் திறைசேரிச் செயலாளரால் குறிப்பிடப்பட்டுள்ள 06.04.2022 திகதியிட்ட தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கை இலக்கம் 03/2022 இன் விதிகளின்படி அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களும் செயற்படவேண்டும் என்று ஜனாதிபதியால் அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

அனைத்து அமைச்சின் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாவட்டச் செயலாளர்கள் மற்றும் அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இது தொடர்பில் நேற்றுக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார். மேற்குறிப்பிட்ட சுற்றறிக்கை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும் எனவும், இதன் கீழ் மேற்கொள்ளப்படும் பொதுச் செலவினங்களுக்கு உரிய அமைச்சுச் செயலாளர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் சபைகளின் தலைவர்கள் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்க வேண்டும் எனவும் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)



## இளைஞர், யுவதிகளுக்கு தலைமைத்துவப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஓக. 16

இளைஞர், யுவதிகளுக்கான தலைமைத்துவப் பயிற்சிகள் வழங்கும் நிகழ்வு வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் பொது மண்டபத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இலங்கை ஒன்று கூடுவோம் அமைப்பினரால் வழங்கப்பட்ட பயிற்சிநெறியில் வளவாளராக நக்கீரன் கலந்துகொண்டார். (ம-14,27)

## சிலிண்டர்கள் திருட்டு: இரண்டு பேர் கைது!

### அச்சுவேலியில் சம்பவம்



யாழ்ப்பாணம், ஓக. 16

எரிவாயு சிலிண்டரை திருடி விற்பனை செய்த குற்றச்சாட்டில் ஒருவரும் அதனைக் கொள்வனவு செய்த குற்றச்சாட்டில் உணவக உரிமையாளர் ஒருவரும் நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என அச்சுவேலி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அச்சுவேலி பொலிஸ் பிரதேசத்துக்குட்பட்ட பகுதிகளில் கடந்த காலங்களில் வெற்று எரிவாயு சிலிண்டர்கள் திருடி விற்பனை செய்யப்படுகின்றன என முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அதனடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையிலேயே குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-23)



## கொடிகாமம் எரிபொருள் நிலையத்தில் நெற்செய்கை விவசாயிகளுக்கு டீசல்

சாவகச்சேரி, ஓக. 16

சாவகச்சேரி கமநலசேவை நிலையத்துக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு கொடிகாமம் எரிபொருள் நிலையத்தில் டீசல் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது.

கரம்பகம், சரசாலை வடக்கு, சரசாலை தெற்கு, கெற்பேலி ஆகிய கமக்கார அமைப்புக்குட்பட்ட நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 8 லீற்றர் வீதம் டீசல் வழங்கப்பட்டது. (ம-14,159)

## வெளிவந்தது அருள் ஒளி

யாழ்ப்பாணம், ஓக. 16

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மாதந்தோறும் வெளியிடும் 'அருள் ஒளி' சஞ்சிகையின் சித்திரை மாதம் தொடக்கம் ஆனி மாதம் வரையான காலப்பகுதிக்குரிய 162ஆவது இதழ் வெளிவந்துள்ளது. (ம-14)

## மழைக்கு சாத்தியம்



கொழும்பு, ஓக. 16

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் மழை பெய்யக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மத்திய, ஊவா, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் உள்ளது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை பொதுமக்கள் மேற்கொள்ளவும்.

அதேவேளை புத்தளத்திலிருந்து மன்னார் ஊடாக காங்கேசன்துறை வரையான கரையோரத்துக்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 - 45 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது - என்றுள்ளது. (ச-இ)

## சட்டவிரோதமாக மரம் வெட்டிய நால்வர் கைது!

யாழ்ப்பாணம், ஓக. 16

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை வளாகத்தில் காணப்பட்ட மரங்களை சட்டவிரோதமாக வெட்டிய குற்றச்சாட்டில் நான்கு சந்தேகநபர்கள் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர் என்று காங்கேசன்துறை தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கடந்த சனிக்கிழமை, காங்கேசன்துறை சிமெந்து கூட்டுதாபனத்துக்குள் சிலர் அத்துமீறி நுழைந்து மரங்களை வெட்டுகின்றனர் என்று கிடைத்த முறைப்பாட்டுக்கமைய மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையில் கொல்லங்கலட்டியைச்சேர்ந்த நான்கு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். அதனையடுத்து சந்தேகநபர்களுக்கு எதிராக மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று காங்கேசன்துறைப் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ம-14,125)

## க.பொ.த. சா/த மாணவர்களுக்கு இலவச கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஓக. 16

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு, யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

சட்டத்தரணி வேலாயுதம் தேவசேனாதிபதியின் கொழும்பு அருள் கல்வி வட்டத்தின் அனுசரணையுடன் இந்தக் கருத்தரங்கு முன்னெடுக்கப்பட்டது. கருத்தரங்கில் பங்குபற்றிய மாணவர்களுக்கு கடந்தகால சாதாரண தர வினாத்தாள்கள், விடைகள் அடங்கிய புத்தகம் இலவசமாக வழங்கப்பட்டது.

இந்த கருத்தரங்கு தொடர்ச்சியாக வடமாகாணத்தில் இடம்பெற்று வருகின்ற நிலையில் நாளை புதன்கிழமை முல்லைத்தீவு ஊற்றங்கரை விநாயகர் ஆலய மண்டபத்திலும், நாளைமறுதினம் வியாழக்கிழமை மன்னார் நகரசபை மண்டபத்திலும், எதிர்வரும் வெள்ளிக்கிழமை வவுனியா நகரசபை மண்டபத்திலும் முன்னெடுக்கப்படவுள்ளது. (ம-14,20)

## ஹாட்லி மைந்தர்களின் வருடாந்த ஒன்றுகூடல்!

யாழ்ப்பாணம், ஓக.16

வடமராட்சி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8 மணிக்கு பழைய மாணவர் அணிகளுக்கிடையிலான துடுப்பாட்டப் போட்டியுடன் நிகழ்வு ஆரம்பமாகும்.

மாலை 6 மணிக்குப் பழைய மாணவர்களுக்கிடையிலான கலந்துரையாடல் நடைபெற்று இரவு 8 மணிக்கு இரவுப் போசனத்துடன் நிகழ்வு நிறைவடையும்.

வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்வில் ஹாட்லிக் கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டும் என்று பழைய மாணவர் சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. (எ-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி
## NCDB
## Northern Co -operative Development Bank

### பதவி வெற்றிடம்

**01. சிரேஸ்டஅபிவிருத்தி உத்தியோகத்தர் (வெற்றிடம் – 01)**

- பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான தகமை: பொருளியல், வர்த்தகம், சமூகவியல்
- குறைந்த பட்சம் 10 வருட தொழில் அனுபவம் -செயற்திட்ட முகாமைத்துவம், தொழில்துறை அபிவிருத்தி, operational delivary, அபிவிருத்தி வேலைதிட்டம் தொடர்பன திறன்
- நிதி மற்றும் கணக்கீடு தொடர்பான கல்வி தகமைக்கு முன்னுரிமை
- செயற்திட்டங்களை திறன்பட முன்னெடுத்தல்.

**02.திட்ட உதவி கணக்காளர் (வெற்றிடம் – 01)**

- பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான தகமை: நிதி, கணக்கீடு, அல்லது வர்த்தகம்
- நிதி மற்றும் கணக்கீடு தொடர்பான கல்வி தகமைக்கு முன்னுரிமை
- நிதி முகாமைத்துவம் மற்றும் திட்டமிடல் சார்ந்த தொழில் அனுபவம் (குறைந்த பட்சம் 1 வருடம் தொழில் அனுபவம்)
- சிறிய நடுத்தர நிறுவனங்களில் வேலை செய்த அனுபவம் (குறைந்த பட்சம் 1 வருட தொழில் அனுபவம்)

**03. செயற்திட்ட உத்தியோகத்தர் (வெற்றிடம் – 01)**

- பல்கலைக்கழக பட்டம் அல்லது அதற்கு இணையான தகமை: (விவசாயத்துறை சார்ந்த பட்டத்திற்கு முன்னுரிமை)
- விவசாயத்துறை மற்றும் திட்டமிடல் சார்ந்த தொழில் அனுபவம் (குறைந்த பட்சம் 1 வருடம் தொழில் அனுபவம்)
- செயற்திட்டங்களை திறன்பட முன்னெடுத்து செல்லும் திறன்.

மேலே கூறப்பட்ட தகைமைகளுடன் MS Office மென்பொருளை கையாளும் திறன். அறிக்கை எழுதுதல் மற்றும் தகவல் தொடர்பாடல் திறன் என்பவற்றை கொண்டிருப்பதுடன் வடமாகணத்தின் எப் பிரதேசத்திலும் பணிபுரிவதற்கான இயலுமை உள்ள விண்ணப் பதாரிகள் lk.ncdb@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு தொடர்பு கொண்டு தங்கள் பதவிநிலைக்கான விதிமுறைகள் மற்றும் விண்ணப்ப படிவத்தை ஆவணி மாதம் 22ம் திகதிக்கு முன்னர் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2022 ஆவணி மாதம் 25ம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பங்களை சமர்ப்பித்தவர்கள் மட்டுமே நேர்காணலுக்கு உள்வாங்கப்படுவார்கள். கூட்டுறவுத்துறை தொடர்பான அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தலைவர்,
வடக்கு கூட்டுறவு அபிவிருத்தி வங்கி,
கைதடி.

(CR 37054) (3/6)

## உடனடி வேலை வாய்ப்பு

House Keeping Course முடித்த அனுபவமுள்ளவர்கள் விடுதிகளில் வேலை செய்ய அவசரமாக தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு: 076 366 9993

(CS 20317) (3/6)

## பெயர் மாற்றம்

535, வளநகர் யோகபுரம் மல்லாவியில் வசிக்கும் **இராமு சிவராணி** ஆண் ஆகிய நான் எனது பெயரை **இராமு சிவஞானம்** என மாற்றம் செய்வதோடு,இனிவரும் சகல ஆவணங்களிலும் **இராமு சிவஞானம்** என்றே கையொப்பமிடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(CS 15990) (3/6) இராமு சிவஞானம்

## 45ஆம் நாள் நினைவஞ்சலி



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 14 - 02 - 1966 | 05 - 07 - 2022 |

கடந்த (05.07.2022) செவ்வாய்க் கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

**அமரர்**
### பாஸ்கரன் கமலாம்பாள்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (16.08.2022) செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் வில்லூன்றி புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை மறுதினம் (18.08.2022) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உடுவில் தெற்கு,
உடுவில்.

குடும்பத்தினர்

(CS 45961) (3/6)

## துப்பாக்கியுடன் இருவர் கைது!

கொழும்பு, ஓக. 16

அம்பாந்தோட்டை மித்தெனிய வில் அண்மையில் இடம்பெற்ற கொலைச்சம்பவம் தொடர்பில் ரி-56 ரக துப்பாக்கியுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.


கடந்த ஜூன் மாதம் 26ஆம் திகதி தனிப்பட்ட தகராறு காரணமாக மலர்ச்சாலை உரிமையாளர் சுட்டுக் கொல்லப்பட்டார். அதன்போது துப்பாக்கிச்சூடு நடத்திய நபரையும் குற்றத்துடன் தொடர்புடைய மற்றுமொருவரையும் தங்காலை குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சந்தேகநபர்களில் ஒருவரிடமிருந்து கொலை செய்யக் கூலியாகப் பெற்ற 5 லட்சம் ரூபாவும் அதன் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட அலைபேசியையும் பொலிஸார் கைப்பற்றினர்.

சந்தேகநபர்கள் 35 மற்றும் 28 வயதுடைய விதாரந்தெனிய மற்றும் திஸ்ஸமஹாராம பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவித்த பொலிஸார், அவர்களை வலஸ்முல்ல நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-14,இ)

## மரண அறிவித்தல்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 10 . 07 . 1941 | 13 . 08 . 2022 |



### செல்லையா அரியரத்தினம் கிருஸ்ணதாசன்

யாழ்ப்பாணம் உயரப்புலம் ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட அரியரத்தினம் கிருஸ்ணதாசன் அவர்கள் கடந்த( 13.08.2022) சனிக்கிழமை அன்று கனடாவில் இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அரியரத்தினம் - புகனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மூத்த மகனும், காலஞ்சென்ற விஜயரட்ணம் – ராஜலக்சுமி தம்பதிகளின் மருமகனும், தேவகியின் பாசமிகு அன்புக் கணவரும், திவாகரன் (கனடா), சுகன்யா (கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அமீ, ஜனகன் ஆகியோரின் அன்பு மாமனாரும், குமாரதாசன், சிறீபத்மதாசன், சிவதாசன் (கனடா), வசந்தா, நாயினி, சிறீசண்முகதாசன் (கனடா) ஆகியோரின் அன்பு சகோதரனும், ரீஸ், டெய்வின், சியோன், தேஜிஸ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.08.2022) புதன்கிழமை 11.30 Am - 1.30 Pm மணி வரை Chapel Ridge funeral Home (8911 Woodbine Avenue, markham, ontario, canada) இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பின்பு தகனக்கிரியைகள் Highland Hills Crematorium இல் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


தொடர்புகளுக்கு
பத்மா - 076 323 0372
வசந்தா - 077 359 6647

தகவல் :
சகோதரர்,
சகோதரிகள்

(CS 45972) (3/6)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 16 - 12 - 1962 | 15 - 08 - 2022 |



### திரு.LION அரியநாயகம் பாலச்சந்திரன்

(உரிமையாளர், பாலா மில் மானிப்பாய், துர்க்கா மில் கட்டுடை)

சரசாலை தெற்கு சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், மானிப்பாய் வைத்தியசாலை ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட திரு.LION அரியநாயகம் பாலச்சந்திரன் அவர்கள் நேற்று (15.08.2022) திங்கட்கிழமை இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற அரியநாயம் மற்றும் இராசம்மா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் - மகேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், ரஜனி அவர்களின் பாசமிகு கணவரும், தனுஷன், தர்சன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், குவேதினி, பிரவீனா ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜெயச்சந்திரன், ரவிச்சந்திரன், சுமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விக்னேஸ்வரி, காலஞ்சென்ற ரஞ்சிதமலர் மற்றும் ஜெயக்குமார், செல்வகுமார் உதயகுமார், சதீஸ்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும், டிவானிகாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாருடைய இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2022) செவ்வாய்க் கிழமை மானிப்பாய் வைத்தியசாலை ஒழுங்கையில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் முற்பகல் 11.00 மணிக்கு மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு தகனக் கிரியைகளிற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும் படி கேட்டுக்கொள்கிறோம்.

வைத்தியசாலை ஒழுங்கை,
மானிப்பாய்.

தகவல் :
குடும்பத்தினர்

(CS 45817) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

## நமசிவாயம் ஜெகதீஸ்வரன் (ஈசன்)



பிறப்பு 08.08.1964 இறப்பு 04.08.2022

யாழ். சங்கானை அரசடி வீதியைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Paris ஐ வசிப்பிடமாகவும், தற்போது பிரித்தானியா லண்டனை வதிவிடமாகவும் கொண்ட நமசிவாயம் ஜெகதீஸ்வரன் அவர்கள் கடந்த (04-08-2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நமசிவாயம், பூமணி (கனடா) தம்பதிகளின் அன்பு மகனும், யாழ். பருத்தித்துறையைச் சேர்ந்த காலஞ்சென்ற சோமசுந்தரம், தங்கேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், நிர்மலா அவர்களின் அன்புக் கணவரும், அனுஷன் அவர்களின் பாசமிகு தந்தையும், அன்னலஷ்சுமி (செல்வி - கனடா), காலஞ்சென்ற மகேஷ்வரன், ஜெயராணி (கனடா), திருமால் (லண்டன்), கெங்காதரன் (சிவா - லண்டன்), ஜெயதர்சினி (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், உதயநேசன் (கனடா), யோகாமாலினி (பிரான்ஸ்), சுரேஸ் (கனடா), தயாளினி (லண்டன்), குமுதினி (லண்டன்), பாலேஸ்வரன் (லண்டன்), சிவராஜ - விஜயா (நியூசிலாந்து), மோகன்- திலகா (இலங்கை), அருள் - ரேவதி (இலங்கை), விமலா - சூரி (சுவிஸ்), ராஜன் (இலங்கை), காண்டீபன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆரபி, ஆரிஸ், அஞ்சலன், ஆதிரா, ஆதித்தியா ஆகியோரின் அன்பு மாம னாரும், ராகுல், அஸ்வின் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், அபிநாஸ், அக்ஷயா, ஆத்விக் ஆகியோரின் அன்புப் பெரியப்பாவும், அலெக்சனா, நிரோஷ், நிதுசன், நிந்துஷா ஆகியோரின் அன்பு மாமாவும், அர்ச்சனா, அபிநயா ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

**பார்வைக்கு :**
Saturday, 13 Aug 2022 4:00 PM - 8:00 PM 445 Kenton Rd, Harrow HA3 0XY, UK

**இறுதிக்கிரியைகள் :**
Tuesday, 16 Aug 2022 11:30 AM - 3:00 PM 366A Stag Ln, London NW9 9AA, United Kingdom

**தகனம் :**
4:00 PM - 5:00 PM Holders Hill Rd, London NW7 1NB, UK,

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:**

| | | |
|---|---|---|
| நிர்மலா | - மனைவி | Mobile : 0044 7405 428 872 |
| உதயநேசன் | - மைத்துனர் | Mobile : 001 416 648 13 94 |
| கெங்கன் (சிவா) | - சகோதரன் | Mobile : 0044 7852 183 561 |
| திருமால் (திரு) | - சகோதரன் | Mobile : 0044 7917 800 774 |
| பாலேஸ் | - மைத்துனர் | Mobile : 0044 7919 371 907 |
| காண்டீபன் | - மைத்துனர் | Mobile : 0094 7708 72182 |

(CS 20278) (3/6)

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் தர்மலிங்கம்



மண்கும்பானை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் தர்மலிங்கம் நேற்று (15.08.2022) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் விசாலாட்சி தம்பதியரின் அன்புப் புதல்வரும், ஆறுமுகம் சிவகாமியின் பெறா மகனும், காலஞ்சென்ற தம்பியப்பா செல்லாட்சி தம்பதியரின் மருமகனும், இராசமணியின் அன்புக் கணவரும், தயாநிதி, தயாபரன், தயாசீலன் (கனடா), தயா தேவன், தயானந்தன் (கனடா), தயானந்தி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும், ரவிச்சந்திரன், சுதாகினி, பத்மினி, சசிரூபா, நிசாந்தினி, சுபேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புமிகு மாமனாரும், சௌந்திரம் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை, சின்னக் குஞ்சு, குமாரசாமி, புவனேந்திரம், கந்தசாமி, சற்குணம் மற்றும் இராசேந்திரம், தையல்நாயகி, வீரகத்திப்பிள்ளை, சின்னம்மா, மகேந்திரன், பாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், வைத்திலிங்கத்தாரின் மருமகனும், காலஞ்சென்றவர்களான செல்வரட்தினம், நாகரத்தினம், வண்டா, சின்னமணி, பவளம் மற்றும் நேசமலர், இன்பமணி, இராசேஸ்வரி, புஸ்பராணி, செல்வநாயகம், விஜயலட்சுமி, பிரபானந்த ரூபி, காலஞ்சென்ற நடராசா, பரமேஸ்வரி மற்றும் மகாலட்சுமி, தியாகராசா, கனகராசா, இராசத்தி, இராசலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், அனோஜன், கௌஜிகன், கபில், விதுசா, ரவீனா, சயந்தினி, சஞ்சுதன், நிலானி, ஜிந்துசா, கஜித்தா, திகழினி, கிசானி, பிவித், வபிசன், துபிசனா, விகாஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2022) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தோற்றம்:15.08.1937 மறைவு:15.08.2022

**தகவல்:
குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்தியாவுக்கு...

உள்ளன. இந்தியா, இராமனை மாவீர னாகக் கருதுவதாகவும் இலங்கை இராமன், இராவணன் இருவரையும் மாவீரர் களாகக் கருதுவதாகவும் ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். (ஒ-5)

## இலங்கைக்...

பரப்புக்குள் நேற்று இரவு பிரவேசித்துள் ளது. இந்தக் கப்பல் இன்று காலை 7.30 மணிக்கு அம்பாந்தோட்டைத் துறை முகத்தை வந்தடையவுள்ளது.

எதிர்வரும் 7 நாள்களுக்கு அம்பாந் தோட்டைத் துறைமுகத்தில் கப்பல் நங் கூரமிடப்பட்டுத் தரித்து நிற்கும் என அறி விக்கப்பட்டுள்ளது.

இந்தக் கப்பலுக்கான அனுமதியை இலங்கை ஆரம்பத்தில் வழங்கியது. இந் தியாவின் கரிசனையைத் தொடர்ந்து இலங்கைக்கான வருகையைத் தள் ளிப்போடுமாறு சீனாவிடம் இலங்கை அரசாங்கம் கோரியிருந்தது. அதற்கு அமைவாக கடந்த 11ஆம் திகதி இலங் கையை வந்தடையவேண்டிய கப்பல் 5 நாள்கள் தாமதமாக, இந்திய சுதந்திர தினம் முடிவடைந்த பின்னர் இன்று அம் பாந்தோட்டையை வந்தடையவுள்ளது. (அ-ஒ-5)

**வேலையாட்கள் தேவை**

A9 வீதி திருமுறுகண்டியில் இயங்கும் சைவ உணவகம் ஒன்றுக்கு பின்வரும் பணியாளர்கள் உடனடியாக தேவைப்படுகின்றனர்.

- முகாமையாளர்
- காசாளர்
- சிட்டை எழுதுனர்
- சமையலாளர்
- உணவு பரிமாறுபவர்

தங்கி நின்று பணிபுரிபவர்களும் விரும்பப்படுவர்

077 386 6250

## 28 நாள்களில்...

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜ பக்சவும் அவரது மனைவி அயோமா ராஜபக்சவும் கடந்த 11ஆம் திகதி தாய் லாந்து செல்லும் வரை சிங்கப்பூரில் உள்ள மரீனா பே சேண்ட்ஸ் விடுதியில் தங்கியிருந்தனர். விடுதி தங்குமிடக் கட்டணமாக 67 மில்லியன் ரூபாவை, ராஜபக்ச குடும்பத்துக்கு நெருக்கமான ஒருவர் செலுத்தியுள்ளார் என்று தெரிவிக் கப்படுகின்றது. (அ-ஒ-இ)

## அத்தியாவசியப்...

போன்ற இறக்குமதி செய்யப்படும் அத்தி யாவசிய உணவுப் பொருள்களின் மொத்த விலை நேற்றும் குறைந்துள்ள தாக புறக்கோட்டை மொத்த விற்பனை யாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் பருப்பின் மொத்த விலை 430 முதல் 450 ரூபாவாகும்.

இறக்குமதி செய்யப்படும் அரிசிகளான பொன்னிச் சம்பா, வெள்ளைப் பச்சை, சிவப்புப் பச்சை போன்றவற்றின் மொத்த விலை 170 முதல் 190 ரூபா வரையுள் ளது.

புறக்கோட்டை மொத்த விற்பனைக் கடை களில் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோகிராம் உருளைக்கிழங்கின் மொத்த விலை 160 ரூபா மற்றும் 165 ரூபா வாகப் பதிவாகியுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ கிராம் பெரிய வெங்காயத்தின் மொத்த விலை 140 முதல் 150 ரூபா வரையி லும், இறக்குமதி செய்யப்பட்ட ஒரு கிலோ கிராம் செத்தல் மிளகாயின் மொத்த விலை ஆயிரத்து 350 முதல் ஆயிரத்து 500 ரூபா வரையிலும் உள்ளது. (ஒ-இ)

## பல்கலை...

பதிவு செய்யப்பட்டுள்ளது.

0742345913 என்ற தொலைபேசி இலக்கத்திலிருந்து அண்மையில் அழைப்பை மேற்கொண்டு ஆபாசமான முறையில் பேசியதாக மாணவிகளின் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - வேறு தொலைபேசி இலக் கங்களிலிருந்தும் தொடர்ச்சியாக இவ்வா றான அழைப்புக்கள் பல்கலைக்கழக மாணவிகளுக்கு வருவதாகவும், அவர்கள் மிரட்டப் படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் உரியமுறையில் கவனம் செலுத்தவில்லை என்று மாணவிகள் தரப்பில் ஆதங்கம் வெளியிடப்பட்டுள் ளது. இதன் காரணமாகவே பொலிஸ் முறைப்பாடு மேற்கொள்ளும் சூழல் உரு வானதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். (அ-ஒ-125)

## மடு அன்னையின்...

ஆண்டகை, கொழும்பு மறை மாவட்டத் தின் துணை ஆயர் மேதகு அன்ரன் ரஞ்சித் பிள்ளைநாயகம் ஆண்டகை ஆகியோர் இணைந்து திருவிழா திருப்ப லியை கூட்டுத்திருப்பலியாக ஒப்புக் கொடுத்தனர்.

இந்த நிலையில் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக் கணக்கான மக்கள் அன்னையின் ஆசீர் வாதத்தை வேண்டி மடு திருத்தலத்துக்கு வருகை தந்தனர். திருவிழா திருப்பலி யைத் தொடர்ந்து மடு அன்னையின் திருச்சொரூப பவனி இடம்பெற்றது.

கடந்த வருடம் நாட்டில் ஏற்பட்டிருந்த கொரோனாத் தொற்றுக் காரணமாக ஆலயத்துக்குச் செல்ல பக்தர்கள் மட்டுப் படுத்தப்பட்டிருந்த நிலையில் இந்த வரு டம் அதிகளவான மக்கள் நேர்த்திக்கடன் களை நிறைவு செய்ய நடைபயணம் மேற்கொண்டு வருகை தந்திருந்தமை யும் குறிப்பிடத்தக்கது. (ஒ-60)

(தொடர்புடைய செய்தி உள்ளே)

**கேள்வி அறிவித்தல்**

**சபைநிதி வேலைத்திட்டம் - 2022**

**வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை, மானிப்பாய்.**

01. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை ,மானிப்பபாய் அவர்களினால் தகுதிவாய்ந்த வழங்குநர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணைகளில் விபரிக்கப்பட்டவாறான பொருட்களை பெறுவதற்காக கோரப்படுகின்றது.
02. கேள்வி பெறத் தகுதியுடையவராவதற்கு, வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், உரிய வியாபார பதிவினை கொண்டவராகவும் அல்லது CIDA தர பதிவுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
03. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் கேள்வி ஆவணமொன்றை வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் எனும் இடத்திலிருந்து **16.08.2022** திகதியிலிருந்து **29.08.2022**ம் திகதி வரை காலை 09.00 மணிக்கும் பி.ப 15.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. **1000.00 ஐ (வரி நீங்கலாக)** செலுத்தி பெற்றுக் கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
04. பூர்த்தி செய்யபட்ட கேள்வி ஆவணங்கள் மற்றும் அட்டவணையில் காட்டப்பட்டவாறு கேள்விப்பிணைத் தொகையினை பணமாக செலுத்தி, பற்றுச்சீட்டினையும் இணைத்து 30.08.2022ம் திகதி பி.ப 02.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள கேள்விப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். கடித உறையில் இடதுபக்க மேல்மூலையில் கேள்வி விபரம் குறிப்பிடப் படவேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த வுடன் வருகைதரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
05. கேள்வி தொடர்பான மேலதிக விபரங்களை வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தலைமையலுவலகத்தில் (தொலைபேசி 021 225 5381) இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

அட்டவணை I

| தொ. இல | விபரம் | தேவைப்படும் எண்ணிக்கை | கேள்விப் பிணை வைப்பு (இத்தொகை பணமாக செலுத்தப்படவேண்டும்) |
|---|---|---|---|
| 01 | 4" Granitite Metal with Piling | 4M3 | 5000.00 |
| 02 | 2" Granitite Metal with Piling | 8M3 | |
| 03 | ¾" Granitite Metal with Piling | 8M3 | |
| 04 | ½" Granitite Metal with Piling | 16M3 | |
| 05 | Bitumen ( 80/100)-(180 Liter Barrel) | 10Barrel | 5000.00 |
| 07 | Vibrating roller(1/2 ton) with Operator and Fuel | 07 Days | 3000.00 |
| 08 | Fire Wood (விறகு வேம்பு, பூவரசு, வீரை, இலுப்பை, நாவல்) | 300Kg | 1000.00 |
| 09 | River Sand with Piling | 8M3 | 3000.00 |

**அ.ஜெபநேசன்,**
தலைவர்
பெறுகைக்குழு
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய.

**பழைய மாணவர்களுடனான கலந்துரையாடல்**

காரைநகர் யா/யாழ்ற்ரன் கல்லூரியின் பழைய மாணவர்களுக் கான கலந்துரையாடல் எதிர்வரும், 28.08.2022 ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத் தில் நடைபெற உள்ளது. பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதிபர்
யா/யாழ்ற்ரன் கல்லூரி
காரைநகர்.

(CR 8668)1-6

**யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்**
**வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2022**

யா/ மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரியின் ஆண்டுப் பொதுக் கூட்டமும் புதிய செயற்குழு உறுப்பினர் தெரிவும் எதிர்வரும் (21.08.2022) ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணிக்கு வீரசிங்கம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். கல்லூரியின் பழைய மாணவர்கள் அனைவரையும் கலந்து கொண்டு கல்லூரியின் வளர்ச்சியில் பங்காற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**நிகழ்ச்சி நிரல்**

1. அகவணக்கம்
2. தலைவர் உரை
3. செயலாளர் அறிக்கை
4. பொருளாளர் அறிக்கை
5. புதிய செயற்குழு உறுப்பினர் தெரிவு
6. முன்மொழிவுகள்
7. நூற்றாண்டு விழா செயற்திட்டங்கள்
8. ஏனைய விடயங்கள்
9. நன்றியுரை
10. இரவுப் போசனம்.

**செயலாளர்**

(CR 37055) (3/6)

LINGAA Fashion
லிங்கா பெஷன்

நல்லூர் அலங்காரக் கந்தன் உற்சவ காலத்தில்
புத்தாடை புது வரவுகளை
**10 - 50% வரை**
விலைக் கழிவுகளுடன்





நல்லூரில் ஆடைகளின் சாம்ராஜ்யம்
அள்ளிச் செல்ல இன்றே விரையுங்கள்.
**லிங்கா பெஷன்**
Whatsapp - 076 644 0722
Tel : 021 221 4999
www.lingaa.lk
www.fb.com / lingaa.lk
No. 302A, TEMPLE ROAD, NALLUR, JAFFNA.
(CR 37056) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## வல்லிபுரம் செல்லையா

(ஓய்வு பெற்ற பொலிஸ் சாஜன் உத்தியோகத்தர்)

யாழ்.கைதடியை பிறப்பிடமாகவும் கனடாவில் 30 ஆண்டுகள் வசித்து கடந்த ஒருவருடமாக பிறந்த மண்ணில் வசித்து வந்தவரான வல்லிபுரம் செல்லையா (ஓய்வு பெற்ற பொலிஸ் சாஜன் உத்தியோகத்தர்) அவர்கள் நேற்று (15.08.2022) திங்கட்கிழமை அதிகாலை 5 மணியளவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுவாமிநாதர் வல்லிபுரம் கண்ணாத்திப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சிதம்பரம் அவர்களின் பாசமிகு கணவரும், ஸ்ரீஸ்கந்தராசா (பேராசிரியர்) (ரெக்சாஸ் அமெரிக்கா), ஸ்ரீரஞ்சனாதேவி (கைதடி), ஸ்ரீறமணி (முன்னாள் விரிவுரையாளர் கிழக்கிலங்கை பல்கலைக்கழகம்) நியூயேர்சி அமெரிக்கா ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் கோகிலம் (ரெக்சாஸ் அமெரிக்கா), பொன்னுத்துரை (கைதடி), சிறிதரன் (நியூயேர்சி அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் வாணி (நியூயேர்சி அமெரிக்கா), மதன் (கனடா) ஆகியோரின் அப்பப்பாவும், ஆதித்தன் (நியூயேர்சி அமெரிக்கா), அபிராம் (நியூயேர்சி அமெரிக்கா), பானுஜன் (கைதடி) ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும் காலஞ்சென்ற சுப்பையா (கைதடி), தங்கரத்தினம் (லண்டன) ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, தெட்சணாமூர்த்தி ஆகியோரின் மைத்துனரும் கிருஷ்ணசுவாமி, நாகேஸ்வரி, கிருஷ்ணதேவன், நாகரத்தினம், காலஞ்சென்ற கிருஷ்ணமூர்த்தி, கிருஷ்ணகோபால் (சுவிஸ்), கிருஷ்ணபகவான் (கனடா), நாகலட்சுமி (கனடா) ,நாகபூபதி (கனடா), நாகபுஸ்பம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு சிறிய தந்தையும் கெங்காதரன் (சட்டத்தரணி முல்லைத்தீவு தண்ணீரூற்று), கிரிதரன் (லண்டன்), நிரஞ்சினி (நோர்வே), வினுதரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சின்னமாமாவும் நமசிவாயம் (கனடா), வேலாயுதர் (கைதடி), இராசம்மா (கைதடி), செல்வராசா (சிட்னி,அவுஸ்திரேலியா), காலஞ்சென்றவர்களான நடராசா, செல்வரத்தினம், இலக்குமணன் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் விக்கினேஸ்வரி, கண்மணி, உமாதேவி, இராசரத்தினம் காலஞ்சென்றவர்களான ஞானசோதி, கதிர்காமு, ரஞ்சனாதேவி ஆகியோரின் மைத்துனரும் பரிமளா (லண்டன்), மஞ்சுளா (லண்டன்), சுரேந்திரன் (கனடா), சசிதரன் (கனடா), விஜீதரன் (கனடா), ஜெயந்திரன், (கனடா), தயாளினி (கைதடி), சுதர்சினி (லண்டன்), விஜயரூபன் (லண்டன்), ரணா (பிரான்ஸ்), ரகு (பிரான்ஸ்), ராதா (பிரான்ஸ்), ரதி (கொழும்பு) ஆகியோரின் மாமாவும் கிருபாகரன் (பிரான்ஸ்), கிருபாலினி (லண்டன்), கீர்த்திகரன் (லண்டன்), உதயபாலினி (கனடா).காலஞ்சென்ற சிவபாலினி, கண்ணன் (கனடா) ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2022) செவ்வாய்க்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப 01.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## இந்தியாவும்...

சீன உளவுக் கப்பல் இந்தியாவின் கரிசனையையும் மீறி இலங்கைக் கடற்பரப்புக்குள் அனுமதிக்கப்பட்டுள்ள சூழலில், இந்திய அரசாங்கம் வழங்கிய டோனியர் 228 கடல்சார் ரோந்து விமானத்தை கையளிக்கும் நிகழ்வில் நேற்று பங்கேற்று உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரலாறு இந்தியாவையும் இலங்கையையும் ஒன்று சேர்த்திருப்பதால் எதிர்காலத்திலும் தொடர்ந்தும் ஒன்றாகப் பயணிக்கவேண்டும். பிராந்தியம் மற்றும் உலக நாடுகளின் பிரச்சினைகளை வெற்றிகொள்வதற்கு ஒன்றிணைந்து செயற்படவேண்டும்.

இந்து சமுத்திரத்தில் உள்ள சிறிய நாடான இலங்கை, உலக வல்லரசாக முன்னேறி வருகின்ற இந்தியாவின் வகிபாகத்தை அவதானித்துக் கொண்டிருக்கின்றது. அவர்களுடன் புரிந்துணர்வுடன் செயற்படும் திறன் அரசாங்கத்துக்கு இருக்கின்றது.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளின் 75 வருட நிறைவை முன்னிட்டு இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கான வாய்ப்பாக இதனைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

இந்திய - இலங்கை உறவுகளுக்கு மாத்திரமன்றி பிராந்தியத்துக்குள்ளும் உலகிலும் பொதுவான பல பிரச்சினைகளை நாம் இனங்கண்டுள்ளோம். அவற்றைத் தீர்ப்பதற்குத் துரிதமாக நாம் செயற்பட்டு வருகின்றோம் - என்றார்.

இந்திய அரசாங்கத்தால் வழங்கப்பட்ட டோனியர் 228 முதலாவது கடல்சார் ரோந்து விமானத்தை இலங்கை விமானப்படைக்கு உத்தியோகபூர்வமாக கையளிக்கும் நிகழ்வு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்தியத் தூதுவர் கோபால் பக்லே ஆகியோர் தலைமையில் கட்டுநாயக்க சர்வதேச விமானப் படைத் தளத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு விசேட அணிவகுப்பு மரியாதை செலுத்தப்பட்டது.

**பின்னணி**

2018ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9 ஆம் திகதி, புதுடில்லியில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் நடைபெற்ற இருதரப்பு பாதுகாப்புப் பேச்சின்போது, இலங்கையின் கடல்சார் கண்காணிப்புத் திறனை மேம்படுத்துவதற்காக இந்தியாவிலிருந்து இரண்டு டோனியர் ரக கடல்சார் கண்காணிப்பு விமானங்களை வழங்குவது குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

பின்னர், இலங்கை அரசாங்கத்தின் கோரிக்கையை ஏற்று, இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான டோனியர் 228 கடல்சார் கண்காணிப்பு விமானம் ஒன்றை முதல் இரண்டு ஆண்டுகளுக்கு இலவசமாக வழங்க இந்திய அரசாங்கம் ஒப்புக்கொண்டது. புதிய விமானம் தயாரிக்க சுமார் இரண்டு ஆண்டுகள் ஆகும் என்பதே இதற்குக் காரணம் ஆகும். இந்த முதல் இரண்டு ஆண்டுகளின் முடிவில், புதிய டோனியர் 228 கடல்சார் ரோந்து விமானத்தை இலவசமாக வழங்க இந்திய அரசு விருப்பம் தெரிவித்ததுடன், பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்பட்ட விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் இலங்கை அரசுக்கு மற்றொரு புதிய விமானத்தையும் இந்தியா வழங்கவுள்ளது. (அ-ஒ-5)

# மரண அறிவித்தல்

தோற்றம்
15 . 12 . 1980



மறைவு
15 . 08 . 2022

## வீரகத்தி பவாகரன்

மாசேரி, வரணியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வீரகத்தி பவாகரன் அவர்கள் நேற்று (15.08.2022) திங்கட்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் வீரகத்தி இராசம்மாவின் இளையமகனும் றாதிகாவின் அன்புக் கணவரும் தருண்யா, அக்சித் ஆகியோரின் அன்புத் தந்தையும் இராசகுமாரி (லீலா), சிவநேசன் (சிறீ), தனுசியா (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், குமாரசாமி சிவயோகத்தின் அன்பு மருமகனும் மற்றும் தியாகலிங்கம், ஸ்ரீதேவி, சந்திரபாலா, நந்தகுமார் (விரிவுரையாளர், தேசிய கல்வியியற்கல்லூரி - வவுனியா), சோபிகா, தர்சன், அமரர் சிறிகுமார் ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08:2022) செவ்வாய்க்கிழமை மாசேரியில் உள்ள அவரது இல்லத்தில் பி.ப 1.00 மணியளவில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் மாசேரி கப்பத்தை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: 077 220 9646
077 178 8801

தகவல் :
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதகளி நடனத்துடன் யாழில் கேளிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 16
யாழ்ப்பாணம், பூநாறிமரத்தடியிலுள்ள மண்டபத்தில் இடம்பெற்ற பூப்புனித நீராட்டு விழாவில் இந்தியாவின் கேரள மாநிலத்துக்குரித்தான கதகளி நடனத்துடன் கேளிக்கையுடனான ஊர்வலமொன்று நடைபெற்றுள்ளது.
நாச்சிமார் கோயிலிருந்து நிகழ்வு மண்டபம் வரையில் காங்கேசன்துறை வீதி வழியாக இந்தப் பவனி நேற்றுப் பகல் இடம்பெற்றது. யானை, குதிரை வண்டில், கதகளி, மேளதாளங்கள் என்பன இந்தப் பவனியில் பங்குகொண்டிருந்தன. இதனைப் பெருமளவான மக்கள் வீதியோரமாக நின்று பார்வையிட்டனர். (அ-ஒ-20)




**கார்கள் விற்பனைக்கு**
Suzuki CELERIO LXI
Year - 2015
MORRIS - MINOR ( 3 Sri)
077 593 8090

**வேலையாட்கள் தேவை**
Waiter, House Keeping, Kitchen helper
முன் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
076 222 0632,021 222 0630

**வேலை ஆட்கள் தேவை**
யாழ்.நகரில் உள்ள பிரபல்யமான புடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் ஆண்/பெண் விற்பனையாளர் உடன் தேவை. அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
076 659 5578


## வரத்தலம் கற்பக விநாயகர் கொடியேற்றம் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 16
பன்னாலை, வரத்தலம் கற்பக விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா மு.ப. 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் இன்று ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து 7ஆம் நாள் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு வேட்டைத் திருவிழாவும், 9ஆம் நாள் வியாழக்கிழமை இரவு 8 மணிக்கு சப்பறத் திருவிழாவும், மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும், 27ஆம் திகதி சனிக்கிழமை மு.ப. 10 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (ஓ-5)

## 4 கால்களுடன் பிறந்த கோழிக்குஞ்சு சாவு!

யாழ்ப்பாணம், ஓக. 16
யாழ். அச்சுவேலி காலானை பகுதியில் உள்ள வீட்டில் கோழிக்குஞ்சு ஒன்று நான்கு கால்களுடன் பிறந்துள்ளது. இருப்பினும் திடீரென நேற்று அது உயிரிழந்துள்ளது.
கோழி வளர்ப்பை வாழ்வாதாரமாகக் கொண்ட வீடொன்றில் ஆறு கோழிக் குஞ்சுகள் பொரித்த நிலையில், அதில் ஒன்று நான்கு கால்களுடன் பிறந்துள்ளது. ஏனைய கோழிக்குஞ்சுகளைப்போல இந்த கோழிக்குஞ்சும் சுறுசுறுப்பாக காணப்பட்ட நிலையில் அந்தப் பிரதேச மக்கள் கோழிக் குஞ்சைப் பார்வையிட்டு வந்தனர்.
இந்நிலையில் அந்தக் கோழிக் குஞ்சு நேற்று உயிரிழந்துள்ளது. (அ-ஒ-27)




**காணி விற்பனைக்கு**
யாழ் நாவற்குழியில் 30 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு
- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.

பார்வை இடும் நேரம் :காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493,076 490 6029


# தையலகத்துக்குள் புகுந்து வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஓக. 16
பருத்தித்துறை நகரில் உள்ள தையலகத்தினுள் புகுந்த முகமூடி அணிந்த நபர்கள் தையலகத்தை அடித்து உடைத்ததுடன் அதன் உரிமையாளரை வாளால் வெட்டி காயப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர். நேற்று திங்கட்கிழமை இரவு 7:30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.
மின்சாரம் தடைப்பட்டதை சாதகமாகப் பயன்படுத்தி மோட்டார் சைக்கிளில் வந்த முகமூடி அணிந்த நபர்கள் இந்த வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். காயமடைந்த 44 வயதான உரிமையாளர் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-26)

### புலம்பெயரிகளுக்குத்...

சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காகவும், ஜெனிவா மாநாட்டை சமாளிக்கவுமே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தடை நீக்கம் என்ற இந்த நாடகத்தை அரங்கேற்றியுள்ளார். அவரின் இந்த ஏமாற்று நாடகத்துக்கு சர்வதேசமும் பலியாகப் போகின்றது - இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதியும், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினருமான சரத் பொன்சேகா தெரிவித்தார்.
புலம்பெயர் அமைப்புக்கள் மீதான தடை நீக்கம் தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சிறிலங்கா பொதுஜன பெரமுனவினரை ஏமாற்றி பிரதமர் பதவியை சுவீகரித்து பின்னர் ஜனாதிபதியாகிய ரணில், முழு நாடாளுமன்றத்தையும் ஏமாற்றி, நாட்டு மக்களையும் முட்டாள்களாக்கி இன்று சர்வதேசத்தையும் முட்டாள் ஆக்கும் கைங்கரியத்தில் ஈடுபட்டுள்ளார்.
தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருந்தமையால்தான் தடைப்பட்டியலில் புலம்பெயர் தமிழ் அமைப்புக்களும், அடையாளம் காணப்பட்ட தனிநபர்களும் சேர்க்கப்பட்டனர். இந்த நிலையில் யார் மூலம் காய்களை நகர்த்தி சர்வதேசத்தை ஏமாற்ற முடியுமோ அந்த அமைப்புக்களினதும் குறிப்பிட்ட நபர்களின் மீதான தடையையும் ஜனாதிபதி நீக்கியுள்ளார்.
பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியிலும் நாட்டின் அரச தலைவர் என்ற ரீதியிலும் இது தொடர்பில் நாடாளுமன்றத்துக்கும், நாட்டு மக்களுக்கும் விரிவான விளக்கத்தை அவர் வழங்கவேண்டும் - என்றார். (அ-ஒ-22)

### முதியவர்...

வீட்டின் பின்பக்கம் அவர் சடலமாகக் காணப்பட்டுள்ளார்.
பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. சம்பவ இடத்துக்குச் சென்ற கிளிநொச்சி மாவட்டப் பதில் நீதிவான் சடலத்தைப் பார்வையிட்டதோடு உடற்கூற்றுப் பரிசோதனைக்காக கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப் பணித்தார். (அ-ஒ-113)

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமக

## மரண அறிவித்தல்

தோற்றம் 26 - 04 - 1949



மறைவு 15 - 08 - 2022

### ஸ்கந்தராஜா சந்தானலட்சுமி (சாந்தா)

நல்லூர் நாயன்மார் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்கந்தராஜா சந்தானலட்சுமி அவர்கள் நேற்று (15.08.2022) திங்கட்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திருநாவுக்கரசு (அப்பர்) - மனோன்மணி தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - ஜெயலட்சுமி தம்பதிகளின் மருமகளும், ஸ்கந்தராஜா (சிறி) (ஓய்வூதியர், வலி.மேற்கு பிரதேச சபை - சுழிபுரம்) அவர்களின் அன்பு மனைவியும், விஜிதன் (கிராம அலுவலர் - கோண்டாவில்), கிருஜா (தேசிய சேமிப்பு வங்கி - யாழ்ப்பாணம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், பவித்திரா (கிராம அலுவலர் - திருநெல்வேலி), தவேந்திரன் (இலங்கை வங்கி - சங்கானை) ஆகியோரின் அன்பு மாமியாரும், விவேகானந்தன் (ஆனந்தன்), சுபத்திரா, யோகேஸ்வரி (சித்திரா) ஆகியோரின் அருமைச் சகோதரியும், சர்வின், வைஷ்ணவின், சஸ்மிகா, வைஷ்மிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2022) செவ்வாய்க்கிழமை நாயன்மார் வீதி, நல்லூரில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணிக்கு செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

45/20A நாயன்மார் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்
077 935 2639, 077 007 5833,021 221 3661

தகவல் : குடும்பத்தினர்

(CS 45987)(13/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org